Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.**90/2021

Depositions of : PW 10 (LW11)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தேவகுமார் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | | முகவரி | : | |
| வயது | : | | மாவட்டம் | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of October - 2025.

(எதிரிஆஜர்)

**முதல் விசாரணை=**

நான் தற்போது நாகப்பட்டினம் மாவட்டம், வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் 2ம் நிலைய காவலராக பணி புரிகிறேன். கடந்த 24.11.2019 அன்று ஆவடி எஸ்.எம் நகர் போலீஸ் குடியிருப்பில் குடும்பத்துடன் வசித்துவந்தேன். அன்றைய தினம் வாகனப்பிரிவில் ஆம்புலன்ஸ் டிரைவராக பணியில் இருந்த போது டியூட்டி ஆபீசர் நாகலட்சுமி இரவு 1.15 மணியளவில் எஸ்.எம் நகரில் தமிழ்நாடு சிறப்பு காவல் படையை சேர்ந்த வெங்கடேஷ் என்பவர் தீ காயங்களுடன் அம்பத்தூர் ஸ்டெட்போர்டு மருத்துவமனை வாயிலில் இருப்பதாக தகவல் வந்தது. நான் உடனே வண்டியை எடுத்துக்கொண்டு போய் பார்த்தபோது அவர் தீ காயங்களுடன் இருந்தார். உடன் இருந்த டியூட்டி என்.சி. ஓ தேன் தமிழ்செல்வன் உதவியுடன் அவரை வண்டியில் ஏற்றி கீழ்ப்பாக்கம் அரசு

மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அவரிடம் கேட்டபோது தன்னுடன் இருந்த ஆஷா ராணி என்பவர் பெட்ரோல் ஊற்றி எரித்துவிட்டுஓடிவிட்டதாக சொன்னார். நாங்கள் அவரை தீக்காய வார்டில் அட்மிட் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

என்னை போலிசார் 25.11.2019 அன்று காலை 8.30 மணியளவில் விசாரித்தனர். நான் ஆம்புலன்ஸ் டிரைவர் என்பதற்கு ஒரு தினசரி நோட்டை பராமரிப்பேன். அதை பார்த்தால் தான் அன்றைய தினம் நான் பணியில் இருந்தது தெரியவரும் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் பணியில் தான் இருந்தேன். அன்னை விசாரித்த போலிஸிடம் தினசரி நோட்டை கொடுத்தேனா என்றால் இல்லை. இரவு பணிக்கு ஒவ்வொரு நாளும் மாலையில் தான் டிரைவரை நியமிப்பார்கள். நான் ஓட்டுவது டெம்போ டிராவலர் வண்டியாகும். வண்டியில் போகும் போது தான் வெங்கடேஷிடம் கேட்டேனா என்றால் ஆம். டிரைவரால் பின்னால் இருப்பவர்களை பார்க்க முடியாது என்றால் சரியல்ல. அந்த வண்டி முழுமையான ஆம்புலன்ஸ் அல்ல. அன்றைய தினம் நான் ஆம்புலன்ஸ் டிரைவராக அந்த வண்டியை எடுத்துக்கொண்டு போனேன். நான்போன போது ஸ்டெட்போர்ட் ஆஸ்பிட்டல் வாசலில் துண்டு கட்டி வெங்கடேஷ் நின்றிருந்தார். அவரை அதற்கு முன்பு இரண்டு முறை பார்த்துள்ளேன். போலிஸ் விசாரணையில் ஸ்டெட்போர்ட் ஆஸ்பிட்டல் வாசலில் வெங்கடேஷ் நின்றிருந்ததாக சொன்னேன். அப்போது அங்கு போலிசார் இல்லை. நான் அன்றைய தினம் டிரைவராக வேலைப்பார்க்கவில்லை என்றும் ஏற்கனவே வெங்கடேஷ் என்னுடன் வேலைபார்த்ததால் அவருக்கு உதவி செய்யும் பொருட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வெங்கடேஷ் குடியிருந்த குடியிருப்பில் தான் நானும் குடியிருந்தேன் என்றால் சரியல்ல. வெங்கடேஷ் 2ம் அணியை சார்ந்தவர். நானும் அதே அணியை சார்ந்தவர் தான். இறந்த வெங்கடேஷ் 95 சதவீத தீக்காயங்களுடன் இருந்தார் என்றும் அவர் என்னிடம் பேசவில்லை என்றாலும் சரியல்ல. ஸ்டெட்போர்ட் ஆஸ்பிட்டல் மருத்துவமனையில் இருந்து திருமுல்லைவாயல் காவல் நிலையம் 3 கி.மீ தூரம் இருக்கும். இரவு 2.15 மணியளவில் மருத்துவமனைக்கு போய்விட்டோம். கதவை

திறந்து வெங்கடேஷ் மருத்துவமனைக்குள் ஓடினார். அதற்கு பின்னால் நாங்கள் போனோம். ஸ்டெட்போர்ட் ஆஸ்பிட்டலில் இருந்து கே.எம்.சி மருத்துவமனை போக பகலில் 1.30 மணி நேரம் ஆகும்.

மறுவிசாரணை இல்லை.